**இலங்கை அணுசக்தி அதிகாரசபை – 2017**

---

இலங்கை அணுசக்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சபை சட்டத்தின் 76(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முமைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை அணுசக்தி சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இல் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கை காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி சூனியமாக காணப்பட்ட போதிலும் ரூபா 33,505,859 தொகை கிரயத்திற்கான 545 சொத்து விடயங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன் பிரகாரம், ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த Geiger Muller Counter வடிவமைப்பு செயற்திட்டத்திற்காக சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 797,950 இற்கான செலவுகளை மூலதனப்படுத்தாமல் நிதிக்கூற்றுக்களில் நடைபெறுவேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அணுசக்தி சபையின் அழிவு எதிர்ப்புச் சோதனை தேசிய நிலையத்தின் கட்டிட நிர்மாண வேலைகளுக்காக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த ரூபா 38,258,027 தொகை தொடர்பாக செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டியவரி ரூபா 4,099,074 இற்கான பெறுமதி கூட்டியவரியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா 7,381,202 இற்கான மீதியில் 2018 ஜுன் 06 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வியாபாரக் கடன் மீதி ரூபா 422,988 தொகையாக இருந்ததுடன் அதில் அடங்கிய ரூபா 117,667 தொகை 4 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவீடு செய்தவற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

2015 ஜுலை 14 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 03/2015 இன் பிரகாரம் நிமித்த உப கட்டுநிதி குறிப்பிடப்பட்ட கருமம் முடிவடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டுமெனினும், 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது 3 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த உள்நாட்டு கொள்வனவுகளுக்கான முற்பணம் ரூபா 52,156 தொகை 2018 ஜுன் 06 திகதி வரை தீர்த்திருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 1,456,454 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,864,974 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,408,520 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. கெமா நிலையத்தின் வருமானம் ரூபா 26,353,650 இனால் அதிகரித்திருந்த போதிலும் திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த மீண்டுவரும் மானியம் மற்றும் உணவு மாதிரிகள் பரிசோதனையின் போது கிடைத்திருந்த வருமானம் முறையே ரூபா 12,500,000 இனால் மற்றும் ரூபா 5,052,334 இனால் குறைவடைதல் மற்றும் அழிவுப் பரிசோதனை தேசிய நிலையத்தின் வருமானத்தில் பொருண்மையான வளர்ச்சி ஒன்று ஏற்படாமல் அதன் செலவுகள் ரூபா 5,080,732 தொகையினால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது. மேலும், இலங்கை அணுசக்தி சபையின் தலைமை அலுவலகம் மற்றும் கெமா நிலையத்துடன் 2017 ஆண்டின் போது ரூபா 18,009,720 இற்கான மிகையொன்றினை உழைத்திருந்த போதிலும் அழிவு எதிர்ப்புச் சோதனை தேசிய நிலையத்தினால் 2017 ஆண்டின் போது ரூபா 16,553,267 இற்கான பற்றாக்குறை ஒன்றினை பெற்றிருத்தல், இலங்கை அணுசக்தி அதிகாரசபையின் ஒட்டுமொத்த மிகை ரூபா 1,456,453 தொகை வரை குறைவடைவதற்கு காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 2 வருடங்களில் அதிகாரசபையின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆண்டின் போது ரூபா 20,985,774 தொகையான தேறிய நட்டம் 2016 ஆண்டளவில் ரூபா 3,864,974 இற்கான தேறிய இலாபம் வரை வளர்ச்சியடைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது மீண்டும் ரூபா 1,456,454 தொகை வரை வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மற்றும் அரசுக்கு செலுத்திய வரி என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2015 ஆண்டின் போது ரூபா 69,922,744 தொகையான அதிகாரசபையின் பங்களிப்பு 2017 ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 107,936,639 தொகை வரை கிரமமாக வளர்ச்சி அடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயலாற்றுகை மற்றும் மீளாய்வு

2014 இன் 40 இலக்க இலங்கை அனுசக்தி சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள இலங்கை அணுசக்தி சபையின் பிரதான குறிக்கோள்கள் இடையே ஒரு குறிக்கோள் என அணு பயன்படுத்துவது தொடர்பாக ஒழுங்கமைப்பு தேவையினை நிறைவேற்றுவதற்காக கதிர்வீச்சு சுற்றெறிப்பு பாதுகாப்பிற்கான சேவைகள் வழங்குதல் வரை காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கதிர்வீச்சு சுற்றெறிவு பாதுகாப்பு பிரமாணங்களுக்கு இணங்க கதிர்வீச்சு

சுற்றெறிவு ஊழியர்கள் தமது சேவை காலப் பகுதியில் தேவையற்ற விதமாக அயணாக்கக் கதிர்வீச்சு சுற்றெறிவு தாக்கப்படுவன கட்டுப்படுத்தல் மூலம், ஊழியர்களின் பாதுகாப்புத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக கதிர்வீச்சு சுற்றெறிவு ஊழியர்கள் தாக்கப்படும் கதிர்வீச்சு சுட்டெறிவு மட்டத்தை அளவீடு செய்வதற்காக வெப்ப ஒளி மாத்திரை மானி (Thermo Luminescence Dosimeters) எனப்படும் TLD சேவையை இலங்கையில் வழங்கும் ஒரே நிறுவனம் அணுசக்கதி சபையாகும்.

எனினும், மீளாய்வாண்டின் போது TLD அட்டைகளுக்காக விண்ணப்பித்திருந்த 04 நிறுவனங்களில் 171 பெண் ஊழியர்களுக்காக அச் சேவைக்காக விண்ணப்பித்து 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அவ்வட்டைகளை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

அதன் பிரகாரம், இந்த சேவைகள் வழங்கும் போது வெப்ப ஒளி மாத்திரை மானி அட்டைகளுக்காக விண்ணப்பித்திருந்த நிறுவனங்கள் அல்லது தனிநபர்களுக்கும் தாமதமின்றி அச் சேவையினை வழங்குவதற்காக சபைக்கு முடியாதிருந்த மையினால் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் மேற்கூறிய குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்த போதிலும் அச் சேவையினை சபையினால் வினைத்திறனுடன் நிறைவேற்றியிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ தொழற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கமா நிலையத்தின் கொள்திறனினை முன்னேற்றுவதற்காக 60 கொபோல்ட் மூல வளத்தை KCi 205 வழங்கி எடுத்துச் சென்று நிறுவுவதற்காக 2015 திசெம்பர் 28 திகதி ரூபா 125,000,000 இற்காக அரச மானியம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், கமா நிலையத்தின் பிரதான வாடிக்கையாளர் ஒருவரின் கட்டளைகளை இழந்திருந்தமையால் எதிர்பார்த்த விதமாக 60 கொபோல்ட் மூல வள கட்டளையிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அதற்காக திறைசேரியால் வழங்கியிருந்த ரூபா 125,000,000 தொகையின் உரிய கருமத்திற்காக மாத்திரம் பயன்படுத்த வேண்டுமென சுட்டிக்காட்டியிருந்த போதிலும், அந்த பணத்தை திருப்பி திறைசேரிக்கு அனுப்பாமல் 2016 ஜனவரி 08 திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி 2016 ஜனவரி 14 முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை மக்கள் வங்கியின் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்து 4 சதவீத சாதாரண வருடாந்த வைப்பு வட்டியின் கீழ் அக்காலப் பகுதிக்காக ரூபா 8,593,347 இற்கான வட்டி வருமானம் ஒன்றினை உழைத்திருந்தது. எனினும், 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது திறைசேரி உண்டியல்களுக்காக சாதாரண வட்டி வீதம் முறையே 8.43 மற்றும் 9.2 சதவீதமாகக் காணப்பட்டமையால் மேற்கூறிய பணம் அதன் கீழ் முதலீடு செய்திருந்தால் ரூபா 17,450,745 இற்கான வட்டி வருமானம் ஒன்றினை உழைக்கக் கூடியதாக இருந்ததுடன் சாதாரண வைப்புக்களின் கீழ் வைப்பு செய்திருந்தமையால் அரசாங்க சந்தர்ப்பக் கிரயம் ரூபா 8,857,398 தொகையாக இருந்தது.

(ஆ) Spectra Meter System – LSD உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக சர்வதேச அணுசக்தி முகவராண்மைக்கு மிகையாக அனுப்பியிருந்த ரூபா 3,591,200 இற்கான தொகை அந்த நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொள்வதற்காக சபை செயற்பட்டிருக்காததுடன் Isotope Radio Mass Spectrometer உபகரணங்கள் மற்றும் X – Ray உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக அந்த நிறுவனத்திற்கு முறையே 2015 திசெம்பர் 02 திகதி மற்றும் 2017 பெப்ரவரி 20 திகதி மீண்டும் கூட்டுத்தொகை ரூபா 14,056,478 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அவ் உபகரணங்கள் இவ்வறிக்கை திகதி வரை சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

## 4.3 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆக்கபூர்வமாக சேவை மட்டமொன்றின் பேணுவதற்காக மற்றும் பதவியணி தொடர்பாக காலத்திற்கு ஏற்ப மீளாய்வு ஒன்று மேற்கொள்ள முடியாமையினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சிரேஷ்ட பதவி நிலை தரங்களில் 10 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்தில் 01 வெற்றிடமும், இரண்டாம் மட்டத்தில் 17 வெற்றிடங்களும் உட்பட சபையில் 38 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) இலங்கை அணுசக்தி சபை தொடர்பாக கணக்காய்வுத் திகதி 2018 மே 30 திகதி அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆட் சேர்ப்பு நடைமுறை ஒன்று தயாரிக்கபட்டு காணப்பட்டதுடன் அந்த தாமதத்தின் காரணமாக அணுசக்தி சபைக்கு உரிய ஆட்சேர்ப்பு நடைமுறை சபையினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது.

(இ) 2014 பெப்ரவரி 17 திகதிய பொது நிதி சுற்றறிக்கை இலக்க 01/2014 இன் 05(2)(இ) இன் பிரகாரம் நிறுவனத்தினால் மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும், இலங்கை அணுசக்தி சபை சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. நிறுவனத்தின் பதவியணியின் அத்தியவசியமான பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை குறிப்பிட்டவாறு நிறப்பாமைக்கு, மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று காணப்படாமை காரணமாகியுள்ளது.

(ஈ) 2015 ஆகஸ்ட் 28 திகதி பணிப்பாளர் சபை கட்டளையின் மீது சபையின் வழங்கள் உத்தியோகத்தர் பதவியில் வேலையை அணவல் செய்வதற்காக முகாமைத்துவ உதவி பெண் உத்தியோகத்தர் ஒருவர் 2015 ஜூன் 04 திகதி முதல் செல்லுபடியாகும் விதமாக நியமனம் செய்யப்பட்டிருந்தது. தாபனக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் வேலைகள் அணவல் செய்வதற்காக படிகள் ஏதும் பெறுவதற்கு உரித்தில்லை எனினும் 2015 ஜூன் முதல் 2018 ஏப்ரல் வரை படியாக ரூபா 126,559 தொகையும், ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 18,984 தொகையும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ரூபா 3,797 தொகையும் ஆக ரூபா 149,340 இற்கான மேலதிக ஊதியமொன்று செலுத்தப்பட்டிருந்தது. எனினும், தாபனக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பிரிவின் பிரகாரம் பதவி ஒன்றில் கடமைகள் மேற்கொள்ளல் எனக் கருதி விஷேட மேலதிக வேதனம் ஒன்று இவ்வாறு செலுத்தப்பட்டிருந்தால் அந்த வேதனம் தாபனக் கோவையின் VII அத்தியாயத்தின் 12.1 ஆம் பிரிவின் பிரகாரம் தாபனப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டுமெனினும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபெறுதகு அபிவிருத்தியின் குறிக்கோள்கள் நெருங்குதல்

நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டு தொடர்பாக அணுசக்தி சபையினால் தமது செயல் நோக்கின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என அறிந்திருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபெறுதரு அபிவிருத்தியின் குறிக்கோள்கள் செயற்படுத்துவது தொடர்பாக அணுசக்தி சபையின் பங்களிப்பு தொடர்பாக ஊக்கம் காட்டும் தரப்பினர் என அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகிய தரப்பினர்களை இனங்கண்டிருந்த போதிலும் அந்த தரப்பினர்களை விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) ஏதேனும் விடயமொன்றின் சரியான செயலாற்றுகையை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படையொன்று காணப்படல் கட்டாய தேவையாக இருந்த போதிலும், சபையினால் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளில் நெருங்குதலை அளவீடு செய்வதற்காக தரவு அடிப்படையொன்று ஏற்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த வேலை செயற்பாடுகள்

#### 6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2006 4(2) பிரிவின் பிரகாரம் குறைந்தளவு 3 வருட காலத்திற்காக எதிர்பார்க்கும் விடயங்கள் அலுவல்கள் தொடர்பாக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க வேண்டியதுடன் அப்பிரிவில் 4(2)(2) காட்டப்பட்டுள்ளவாறு பெறுகைகள் அலுவல்கள் ஆரம்பமாகும் சந்தர்ப்பம் முதல் முடிவு செய்யும் வரை ஒவ்வொரு பெறுகைகள் செயற்பாடுகளினதும் கட்டங்களை காட்டக்கூடிய விதமாக விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். எனினும், சபையினால் ரூபா 100 மில்லியன் தொகை பெறுமதியான 56 விடயங்களுக்காக பெறுகைகள் திட்டமொன்று 2017 ஆண்டிற்காக மாத்திரம் தயாரித்திருந்ததுடன், அந்த பெறுகைகள் திட்டம் தொடர்பாக விரிவாக பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4(2)(3) பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு பெறுகைகள் திட்டம் அடிக்கடி நாளதுவரை ஆக்கப்படல் பெறுகைகள் நிறுவனத்தின் பொறுப்பொன்றாகும். எனினும், 2017 ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி மூலதன செலவுகள் தொடர்பாக பாதீட்டுத் தொகை 24.9 மில்லியன் ரூபா என திருத்தியிருந்ததுடன் பெறுகைகள் திட்டத்தில் அடங்கியிருக்காத ரூபா 3,185,555 மூலதன பண்டங்கள் பெறுகை செய்திருந்த போதிலும், பெறுகைகள் திட்டத்தை அதன் பிரகாரம் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 21,842,028 தொகை பெறுமதியான 15 பெறுகைகள் தொடர்பாக பெறுகைகள் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 03 மாதங்கள் மற்றும் 09 மாதங்கள் இடைப்பட்ட காலமொன்று கடந்திருந்த போதிலும், பெறுகைகள் செயற்பாடுகளின் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதலின் பலவீனங்கள் காரணமாக அவ்விடயங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

மேலும், அழிவு எதிர்ப்புச் சோதனை தேசிய நிலையத்தின் பரிசோதனை விடயங்களுக்காக ஈடுபடுத்துவதற்காக விண்ணப்பித்திருந்த Digital Detector Array with Software உபகரணத்திற்கான பெறுகைகள் திட்டம் மற்றும் பாதீட்டில் ரூபா 6.5 மில்லியன் கிரயமொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், விலைகூறல்கள் அழைப்பின் போது அதற்காக முன்வந்திருந்த விலைகூறல் பாதீட்டு நிதி ஏற்பாடுகளுடன் இணக்கஞ் செய்த போது 400 சதவீத்தை மிகைத்திருந்தல் மற்றும் உரிய மாதிரிகளுடன் இணங்காமையின் காரணமாக பெறுகையில் இடை நடுவில் நிறுத்தி விடுவதற்கு நேரிட்டிருந்தது. இதன் பிரகாரம் பௌதீக வளங்கள் உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ளாமையின் காரணத்தினால் உரிய உபகரணங்களை பயன்படுத்தி மேற்கொள்வதற்கு இருந்த கருமங்களை வினைதிறனுடன் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

### 6.1.2 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

2012 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களில் அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட பெறுகைகள் குழுக்களில் அதிகார வரையரைக்கு உட்பட பெறுகைகளின் மொத்த கிரயம் மதிப்பீட்டில் 10 சதவீதத்தை மிகைத்த முரண்கள் தோன்றுகின்றதென காணும் சந்தர்ப்பங்களில் போலவே அங்கீகரிக்கப்பட்டிருந்த நோக்கெல்லை வித்தியாசப்படும் போது அல்லது அதற்கான கிரயம் மதிப்பீடுகளின் திருத்த பிரேரணைகள் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அறிக்கைகள் கிரய மதிப்பீடுகளை பரிசோதனை செய்யும் குழுவிற்கு சமர்பிப்பதற்காக பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

அவ்வாறாயினும் சபையின் அழிவு எதிர்ப்புச் சோதனை தேசிய நிலையக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ஆரம்ப மொத்த கிரய மதிப்பீடு ரூபா 308,653,543 தொகை எனினும், 2014 ஆண்டின் போது பூர்த்தி செய்திருந்த கட்டிடத்திற்காக திருத்திய மொத்தக் கிரயம் ரூபா 428,981,984 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம், கிரய முரண் 39 சதவீதத்தை உடைய அந்த நிர்மாண வேலை மதிப்பீடு உரிய குழுவுக்கு சமர்பித்திருக்கவில்லை. எனினும், மொத்த முரணில் 35 சதவீதமான அதாவது, ரூபா 42,533,542 தொகைக்கான செலவுகளுக்காக மாத்திரம் அங்கீகாரத்தை பெறுவதற்காக 2016 ஜூன் 28 திகதி நிலையான அமைச்சரவை பெறுகைகள் குழுவிற்கு சமர்பித்திருந்த போதிலும் அதற்காக அங்கீகாரம் 2018 ஜூன் 20 திகதி வரை கிடைத்திருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 22 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 15 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன், மூலதன செலவுகளுக்கான பாதீட்டு நிதியேற்பாடு ஆகிய ரூபா 100.1 மில்லியன் இல் இருந்து ரூபா 23 மில்லியன் அதாவது 23 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்படுத்தியிருக்கவில்லை.

## 7 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் செயலாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் கணக்கீடு | ஆதனங்கள், பொறியும் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கை காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமை. |
| (ஆ) | பெறவேண்டிய மீதிகளின் கட்டுப்பாடு | பெறவேண்டிய பணம் தாமதமின்றி சேகரித்திருக்காமை. |
| (இ) | மனிதவள முகாமைத்துவம் | மனிதவள நிறுவனத்தின் குறிக்கோள்களை நோக்கி நெருங்கக் கூடிய விதமாக உரிய முறையில் முகாமைத்துவம் செய்யாமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு யதார்த்தமாக தயாரித்து கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை. |